எம்.சி.ஓ.பி எண்: 2975 /20 24 தேதி: 02.03.2026

மசா. : 1

பெயர் : தங்கம்

க /பெ. : முருகேசன்

வயது : 42

<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரி. விபத்தை குறித்து அதே பஸ்யில் சென்ற என் மகனின் நண்பர் தகவல் ஃபோன்மூலம் சொன்னார். அந்த தகவலை கேட்டு காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன்என்றால் சரி. சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்றேன். அதற்கு முன்பே எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து எப்படி நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை இரண்டாவது மனுதாரர் எழுதினார். நான் கையொப்பம் இட்டேன். என்னுடைய முதல் மகன் இரண்டாவது மனுதாரர் விபத்தை நேரில் பார்க்கவில்லை. புகார் மனுவில் பஸ்யின் பின் பக்க கதவும், லாரியின் பக்கவாட்டில் சேதம் அடைந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தில் என் மகன் உட்பட 3 பேர் இறந்துபோனார்கள். ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. என் மகனும், மற்ற 3வரும் பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்தார்கள் என்றால் சரியல்ல. பஸ்யின் பின் பக்க படிக்கட்டும் லாரியும் உராய்சியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அவ்வாறுதான் நான் புகார் கொடுத்திருக்கிறேன். என் மகன் பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்ததால்தான் விபத்து ஏற்பட்டது. அவர் பஸ்யின் உள்பகுதியில் பயணம் செய்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. விபத்து குறித்த மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய மகனின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இரண்டாவது மனுதாரர் இறந்துபோனவரின் மூத்த சகோதரர். 2வது மனுதாரர் கம்பெனியில் வேலை பார்த்தார். 2ம் மனுதாரர் இறந்தவரை சார்ந்து வாழவில்லை என்றால் சரிதான். இறந்து போன என் மகன் படித்துக்கொண்டே வேலை பார்த்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தற்பொழுதும் நான் என் மூத்த மகனை

சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என் மகன்தான் காரணம் என்றாலும் எதிர்மனுதாரர்கள் எந்தவித இழப்பீடும் தரதேவை இல்லை என்றால் சரியல்ல. நான் ஏதாவது இழப்பீடு பெறவேண்டுமானால் 3,4 மனுதாரர்தான் தரவேண்டும் என்றால் சரியல்ல. அனைத்து எதிர்மனுதாரரரும் தரவேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து யாருடைய கவனக் குறைவால் விபத்து நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் பஸ் மற்றும் என் மகன் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. நான் ஏதாவது இழப்பீடு பெறவேண்டுமானால் 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரரிடமிடம் கேட்கமுடியும். 3,4 எதிர்மனுதார் பொறுத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.